விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valamprii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 077 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 22 செவ்வாய்க்கிழமை (05.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில்

# சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

- ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாந்தனுக்கு அஞ்சலி.
- திருநீறினால் மூடப்பட்ட சாந்தனின் வித்துடல்
- கிணற்று நீரைப் பருக்கி சாந்தனை வழியனுப்பிய தாயார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## 21.9 சதவீதத்தால்

# மின் கட்டணம் குறைக்கப்பட்டது

(கொழும்பு) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 21.9 சதவீதத்தினால் இவ்வாறு மின் கட்டணம் குறைக்கப் பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டு சாந்தனின் உயிரைப் பறித்துள்ளார்கள்



சாந்தனுக்கான இறுதி அஞ்சலி நிகழ்வில் ஒலிநாடா ஊடாக முருகன்

(சென்னை)

சாந்தன் தாய் மண்ணில் கால்வைக்க 15

## பிரபாகரனின் இல்ல வளாகத்தில் அஞ்சலிக்காக சாந்தனின் புகழுடல்



15

### சந்தேகநபர் அடித்துக் கொலை

## இரு பொலிஸாருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் உத்தி யோகத்தர்களுக்கு, கொழும்பு மேல் நீதி 15



## பொருளாதார மாற்றத்துக்காக 62 புதிய சட்டங்கள் நிறைவேற்றப்படும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற் காக மேலும், 62 புதிய சட்டங் களை, பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தாம் எதிர் பார்த்துள்ளதாக, ஜனாதிபதி ரணில் 15

### சபாநாயகருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபையில் சமர்ப்பிப்பு



(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிராக கொண்டு வரப் பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் கையளிக்கப் படும் என எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற 15

## வடக்கில் 164 ஏக்கர் காணியை விடுவிக்க இராணுவம் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் 164 ஏக் கர் பொது மக்களின் காணியை விடுவிக்க இராணுவம் இணக் கம் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத் தில் காணி தொடர்பிலான நடமாடும் சேவையின்போது, இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் போதான கலந்துரை யாடலில் இராணுவ அதிகாரி கள் அவ்வாறு தெரி வித்துள்ளனர். 15

## எரிபொருள் விலையில் மாற்றம்

(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலை யில் திருத்தம் மேற் கொள்ளப்படவுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தனின் இறுதிக் கிரியை நிகழ்வுகள்

## தன்கையால் உணவூட்டி
# சாந்தனின் இறுதியாசையை நிறைவேற்றிய தாயார்

சாந்தனின் தாயார் தமது உயிரிழந்த மகனுக்கு உணவு ஊட்டியுள்ளார். இது பார்ப்பவர்களை மேலும் துயரத்திற்கு உள்ளாக்கியிருந்தது.

தனது தாயின் கையால் ஒரு வேளை உணவு உண்ண வேண்டும் என்பது சாந்தனின் இறுதி ஆசையாகவும், தமது மகனுக்கு பல்சுவை உணவுகளை சமைத்துக் கொடுக்கவேண்டும் என்பது சாந்தனின் தாயின் இறுதி ஆசையாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இது இறுதிவரை நிறைவேறாத ஆசையாகவே போனது.

இந்நிலையில், சாந்தனின் பூதவுடலுக்கு தாயார் உணவு ஊட்டியது பார்ப்பவர்களின் கண்களை கலங்கவைத்துள்ளது.

(ம-7)

## சாந்தனின்...

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனை ஆக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார்.

அவர் இலங்கை வருவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்த நிலையில் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் உயிரிழந்திருந்தார்.

அவரின் உடலம் சகோதரி வீட்டுக்கு கொண்டு வரப்பட்டு நேற்று திங்கட்கிழமை நண்பகல் சமயக் கிரியைகள் நடைபெற்று

பிற்பகல் அறிவகம் சன சமூக நிலையத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சாந்தனின் பூர்வீக இல்லத்திற்கு உடலம் எடுத்துவரப்பட்ட நிலையில் கிணற்றின் நீரை மகனுக்கு பருக்கி மகனை வழியனுப்பி வைத்தார் சாந்தனின் தாய்.

அங்கு தமது கிணற்றில் நீரினை சாந்தனுக்கு பருக்கியதுடன், தனது இளைய மகனான மதிசுதாவுக்கு வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் மாலைகளை அணிவித்து மகனை தாயார் அனுப்பி வைத்தார்.

மேலும் மகனை உங்களுடன் (தந்தையான தில்லையம்பலம்) அழைத்துச் சென்று விட்டீர்கள் எனக்கும் அவன் பிள்ளை தானே என்னிடம் விட்டு சென்றிருக்கலாமே என கண்ணீர் மல்க தெரிவித்து மகனை வழி அனுப்பி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் உடுப்பிட்டி கெருடாவில் வல்வெட்டித்துறை ஊடாக பொலிகண்டி ஊடாக வெள்ளாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வல்வெட்டித்துறையில் தலைவர் பிரபாகரனின் வீட்டிற்கு முன்பாக உடலம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளம் குளம் இந்து மயானத்தில் தேவாரம் ஓதப்பட்டு விதை குழியில் திருநீறு தூவப்பட்டு குழி புனிதமாக்கப்பட்டதை தொடர்ந்து பேழை திருநீறினால் மூடப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

நல்லடக்க நிகழ்வுகளை வேலன்சுவாமிகள் நெறிப்படுத்தினார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், அங்கஜன் இராமநாதன், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பொதுமக்கள் என பலரும் வீட்டிலும் ஒழுங்கமைக்கப்பட்ட இடங்களிலும் வீதிகளிலும் நின்று அஞ்சலி செலுத்தினர்.

(ம-7,33,60)

## மின் கட்டண...

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 அலகுகளுக்கும் குறைவான மின் பாவனையாளர்களுக்கு தற்போது அறவிடப்படும் 12 ரூபாய், 8 ரூபாவாக குறைக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 33.3 சதவீதத்தால் அது குறைக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல், 31 முதல் 60 அலகு வரையான மின் பாவனையாளர்களுக்கு 28 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது.

மேலும், 60 முதல் 90 அலகு வரையிலான மின் பாவனையாளர்களுக்கு 30 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது.

அதேபோல், 90 முதல் 180 வரையிலான பாவனையாளர்களுக்கு 24 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ள நிலையில், மத ஸ்தாபனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு 33 சதவீதத்தாலும், ஹோட்டல்கள் மற்றும் தொழிற்துறைகளுக்கு 18 சதவீதத்தாலும் மற்றும் பொது நோக்கத்திற்கான மின் பாவனைக்கு 23 சதவீதத்தாலும் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

# கொக்குத் தொடுவாய் மனித புதைகுழி வழக்கு
## ஏப்ரல் 4ஆம் திகதி ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த வருடம் ஜூன் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு

எதிர்வரும் ஏப்ரல் 04ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மீண்டும் ஏப்ரல் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர் சட்டத் தரணிகளான வீ.எஸ். நிறஞ்சன், கணேஸ்வரன், தனஞ்சயன், ருஜிக்கா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில் வழக்கின் அகழ்வுப் பணியினை திட்டமிட்டபடி நடாத்த நிதி கிடைக்கபெறவில்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் முதல் கட்ட அகழ்வானது கடந்த வருடம் (06.09.2023) ஆரம்பமாகி பதினொரு நாட்கள் நடைபெற்று 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இரண்டாம் கட்ட பணிகள் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் நடைபெற்று 40 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,299,315)


மொத்த கொள்வனவு

400g அங்கர் பால்மா மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்.

Happy Super market - உரும்பிராய்

077 945 5167



(19362)



உ
சிவமயம்

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும்"



புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலய
பொங்கல் தொடர்பான அறிவித்தல்-2024

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 24.03.2024 ஆந் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் **நாளை 06.03.2024 ஆந் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில்** கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலில் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், உபயகாரர்கள், உற்சவ கால தொண்டர்கள் என சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

தகவல்
ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை

நாகதம்பிரான் ஆலயம்

(8463)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாடு திரும்பிய 17 இலங்கையர்கள்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் சிக்கி ரஷ்யாவிலுள்ள இராணுவ முகாமில் பணியமர்த்தப்பட் டிருந்த 17 இலங்கையர்கள் குறித்த முகாம்களில் இருந்து தப்பிய நிலையில் நாடு திரும்பியுள்ளனர்.

அத்துடன், 50இற்கும் மேற்பட்ட பல இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்பி வர முடியாமல் ரஷ்ய இராணுவ முகாம்களில் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான யுத்தத்தின் மத்தியில், அரசாங்கத்தின் தலையீடு இன்றி ரஷ்யாவுக்கு இராணுவ சேவைக்காக பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய பொதுமக்களை அனுப்பும் மோசடி தொடர்பான விடயங்கள் குறித்து கடந்த மாதம் 4 ஆம் திகதி வெளிக் கொண்டு வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (5-6)

# பொருளாதாரம் மீட்சியடைவதாக தெரிவித்து மக்கள் மீது சுமைகளை திணிக்கும் அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

**நாட்டில் உணவு பொருட்களின் விலை அதிகரித்து வருகின்ற போதிலும் ஜனாதிபதி மக்களின் பணத்தை பெற்றுக்கொண்டு வெளிநாடு முழுவதும் விஜயங்களை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம்சுமத்தியுள்ளார்.**

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவிலும் இன்னும் எந்தத் திட்டமும் அறிமுகப்படுத்தப் படவில்லை.

இந்தநிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் 100 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டாலும் டொலர்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.


பொருளாதார மீட்சியடைந்துள்ளதாக கூறி வந்தாலும் அரசாங்கம் எப்போதும் மக்கள் மீது சுமைகளை ஏற்றி மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

வங்குரோத்து நிலையிலிருந்து வெளியேற பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டும்.

அதற்காக உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நேரத்தில் அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி வருவதாக சஜித்த பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (5-6)

# இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக நாட்டை மாற்றியமைக்கும் முயற்சியில் அரசு

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாதுக்க வேரகல பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார மற்றும் சமூக பாதிப்பை அரசாங்கம் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது. இந்தியாவின் செல்வந்தரான அதானிக்கு இலங்கையின் பெரும்பாலான வளங்களை வழங்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தியின் பங்குகளை அதானி நிறுவனத்துக்கு வழங்குவதால் நடுத்தர மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது.

இலங்கை மின்சாரத்தை பல கூறுகளாக பிரித்து அதனையும் இந்தியாவுக்கு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதார கேந்திர மையங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்கும் செயற்பாடுகளினால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படும். இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் சொந்த நாட்டுக்குள் இரண்டாம் தர பிரஜைகளாக கருதப்படுவார்கள் என தெரிவித்தார்.(5-6)

# இலங்கைக்கு வருகை தரும் ஐ.எம்.எப் பிரதிநிதிகள் குழு




(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று நாளை மறுதினம் 7ஆம் திகதி விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் இரண்டாவது மீளாய்வுக்காக நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இரண்டாவது மீளாய்வு நிறைவடைந்ததன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை இணக்கப்பாடு கிடைக்கப் பெற வேண்டும். அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணையை பெற்றுக்கொள்ள முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (5-6)

# மின்சாரம், எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

(கொழும்பு)

மின்சாரம் மற்றும் எரிபொருட்கள் விநியோகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அதி விசேட வர்த்தமானி மூலம் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

அதன்படி, மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் அல்லது வழங்கல் ஆகியவற்றுடன் இணைந்த அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்ட இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறித்த சேவைகள் அத்தியாவசியமான சேவைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

(5-6)

# டிஜிற்றல் முறையில் மோட்டார் வாகன பதிவுகள்



(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகள் நேற்று முதல் டிஜிற்றல் முறையில் முன்னெடுக்கப் பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சேவை பெறுநர்கள் தொலைபேசி இலக்கங்களில், முதல் மூன்று இலக்கங்களும் தங்களுடைய மாவட்ட தொலைபேசி குறியீட்டு இலக்கத்தை முதலாவதாக அழுத்தி, பின்னர் 2 117 116 என்ற தொலைபேசி இலக்கத்தையும் சேர்த்து அழைப்பினை ஏற்படுத்துவதன் ஊடாக தங்களுக்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கி கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் ஊடாகவும் தங்களுக்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும் எனவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# வடமராட்சி கல்லூரிகளின் சமர்
## சம்பியனானது பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி



வடமராட்சி கல்லூரிகளின் சமர் என வர்ணிக்கப்படும் ரட்ணசபாபதி கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

குறித்த போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றிக்காக போராடி சம பலத்துடன் காணப்பட்டன.

இடைவேளைக்கு முன்னர் எதுவித கோல்களும் பதிவு செய்யாமல் நிறைவடைந்தது. இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் இரு அணிகளும் சமபலத்துடன் மோதின. இரு அணிகளின் வீரர்களாலும் கோல் கம்பங்களை நெருங்கிய போதிலும் ஆட்ட நேரத்தில் கோல் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

இதில் ஆட்ட நாயகனாக ஹாட்லிக் கல்லூரி அணி வீரர் என்.பவநீதன், சிறந்த கோல் காப்பாளராக ஹாட்லிக் கல்லூரி அணி வீரர் எஸ்.ஆர்நிகன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-90)

# வெற்றிவாகை சூடியது
## மயிலங்காடு ஞானமுருகன்




நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி மயிலங்காடு ஞான முருகன் வெற்றி வாகை சூடியது.

இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் முல்லைத்தீவு சென் ஜூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் ஜேம்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்று போட்டியின் இறுதிப் போட்டியானது நேற்று முன்தினம் முல்லைத் தீவு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழகமும் பலப்பரீட் சையில் மோதின. நவ ஜீவன்ஸ் அணியினர் கடுமையாக போராடியும் துரதிஷ்டவசமாக எந்தவித கோல்களையும் போடமுடியவில்லை.

போட்டி நிறைவில் மயிலங்காடு ஞானமுரு கன் அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் போட்டியை வென்று சம்பியன் பட்டத்தை தமதாக்கி கொண்டனர்.

இந்நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான காசோலையும் கேடயங்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6-299)

# சன்ரைசர்ஸ் அணியின் கப்டனான கம்மின்ஸ்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்று சன்ரைசர்ஸ் ஐதராபாத். இந்நிலையில் 2024 சீசனுக்கான அணியின் கப்டனாக அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளரும் அந்த அணியின் கப்டனுமான பேட் கம்மின்ஸ் கப்டனாக செயற்படுவார் என சன்ரைசர்ஸ் ஐதராபாத் தெரிவித்துள்ளது.


பேட் கம்மின்ஸை சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 20.5 கோடி ரூபாய் கொடுத்து ஏலம் எடுத்தது. ஐ.பி.எல் கிரிக்கெட் வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலம் போன 2ஆவது வீரர் இவராவார்.

பேட் கம்மின்ஸ் இதற்கு முன்னதாக கொல்கத்தா நைட் ரைடரஸ், டில்லி டேர்மொவில்ஸ் அணிகளுக்காக விளையாடியுள்ளார்.

இவரது தலைமையில் அவுஸ்திரேலியா அணி 50 ஓவர் உலகக் கோப்பை மற்றும் ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் ஆகியவற்றை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி ரணிலை சந்தித்த போரா சமூக ஆன்மீக தலைவர்

(கொழும்பு)

போரா சமூகத்தின் ஆன் மீகத் தலைவர் கலாநிதி செய்யதினா முஃபத்தல் செய்புதீன் சாஹிப் புக்கும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கும் இடை யிலான சந்திப்பொன்று பெஜெட் வீதியி லுள்ள ஜனா திபதியின் உத்தி யோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக ஜனா திபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங் கவுடன் சிநே கபூர்வ உரையாடலில் ஈடுபட்ட கலாநிதி செய்ய தினா முஃபத்தல் செய் புதீன், இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்ப ஜனாதிபதி நடை முறைப்படுத்தி யுள்ள வேலைத்திட்டத் தைப் பாராட் டியதாக தெரிவிக் கப் பட் டுள் ளது. (5-6)

## சாவகச்சேரி பிரதேசசபை
## பகிரங்க ஏல அறிவித்தல்-2024

எமது சபையினால் கீழ் குறிப்பிடப்பட்ட **சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்** என்பன **பகிரங்க ஏல** அடிப்படையில் குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளன.

**இடம்: சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகம்**
**காலம்: 20.03.2024 மு.ப 10.00 மணி**

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | மாத வாடகை | 2024 இற்கான ஆ. பகிரங்க ஏலத்தொகை | 01.04.2024 - 31.12.2024 காலப்பகுதிக்கான ஆ. பகிரங்க ஏலத்தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக் கூடியது) |
|---|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | | |
| 1 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 968,100.00 | 653,500.00 | 100,000.00 |
| 2 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் மற்றும் வண்டி வாகன தரிப்பு நிலையம் | | 23,800.00 | 16,500.00 | 1,000.00 |
| வரணி உப அலுவலகம் | | | | | |
| 3 | வரணி பொதுச்சந்தை | | 52,300.00 | 35,500.00 | 5,000.00 |
| 4 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | | 27,600.00 | 19,000.00 | 5,000.00 |
| 5 | வரணி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 329,700.00 | 223,000.00 | 10,000.00 |
| 6 | வரணி இயற்றாலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 36,600.00 | 25,000.00 | 5,000.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | | |
| 7 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 173,900.00 | 117,500.00 | 10,000.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | | |
| 8 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 77,900.00 | 53,000.00 | 10,000.00 |
| 9 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 40,900.00 | 28,000.00 | 5,000.00 |
| 10 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | | 104,500.00 | 71,000.00 | 10,000.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | | |
| 11 | நாவற்குழி பொதுச்சந்தை | | 25,700.00 | 17,500.00 | 1,000.00 |

ஏலத்தில் பங்குபெற விரும்புவோர் **05.03.2024 -19.03.2024 3.00** மணி வரையான காலப்பகுதியில் **சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில்** வைப்புப் பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று ஏலத்தில் கலந்து கொள்ள முடியும் என்பதை இத்தால் பகிரங்கமாக அறியத்தருகிறேன்.

**க.சந்திரகுமார், தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற வெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**

(சி-8465) **05.03.2024**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வைத்திய கலாநிதி.நடராஜா சிவராஜா நினைவுப்பேருரை-2024**

பேருரைத் தலைப்பு:
Humanities in Medical Education:
Current and Future

பேருரை வழங்குநர்:
**Prof.Saroj Jayasinghe,**
**Consultant physician,**
**Former Chair Professor of Medicine,**
**Department of Clinical Medicine,**
**Faculty of Medicine, University of Colombo.**

**திகதி:** 06.03.2024 (புதன்கிழமை)
பி.ப 3.00மணி

**நிகழ்விடம்:** ஹூவர் கலையரங்கம்,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி-8464)

# இராசிபலன்

**05.03.2024**
**மாசி 22, செவ்வாய்க்கிழமை**
**தசமி பின்னிரவு 1.59 மணிவரை**

**மூலம் முற்பகல் 11.35 மணிவரை**
**சுபநேரம் 10.55-12.25 மணிவரை**
**இராகுகாலம் 3.25-4.55 மணிவரை**

**சந்திராஷ்டமம்: கார்த்திகை, ரோகினி.**

**வளவன்**




இழுபறியாக இருந்த காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதி கரித்து மனமாற்றம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




வழிபாடு சிறப்பி னைத் தரும், தொலை பேசி வழியில் மகிழ் ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.




ஆதாயம் தரும் வேலை யொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட் களை வாங்கும் எண்ணம் உருவா கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




பக்குவமாய் பேசி காரியம் சாதிக்க வேண் டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெற லாம், வீட்டை அழகுபடுத்துவ தில் ஆர்வம் கூடும்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திருடர் பய முண்டு, திடீர் மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.




சுபகாரியப் பேச்சுக் களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




இயல்பான வாழ்க் கையில் இன்பங்கள் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேர லாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற் சிகளில் முன்னேற்றமுண்டு.




நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




பேச்சில் கனிவு பிறக்கும், தொலை பேசி வழியில் ஆச் சரியம் தரும் தகவல் கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




மற்றவர்களின் விமர் சனங்களை மறந்து செயற்படுவது நல் லது, புதிய முயற்சி களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்க ளின் தகுதியை உயர் த்தும், செய்தொழி லில் மேன்மையுண்டு, பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர் வீர்கள்.

நிம்மதியான வாழ்க்கையே நிறைவான வெகுமதி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறுகிய காலத்தில் சேதமடைந்த வீதிகள்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிப் புனரமைப்புகளில் தரமற்ற வெண் கிரவல் பயன்படுத்தி வீதிப் புனரமைப்புகள் மேற்கொள்ளப்பட்ட வீதிகள் குறுகிய காலங்களுக்குள்ளேயே சேதமடையத் தொடங்கியுள்ளன.

வீதிப் புனரமைப்புகளுக்கு சிவப்பு கிரவலையே பயன் படுத்துவது வழமை. ஆனால் தரமற்ற வெண் கிரவல் பயன்படுத்தப்பட்டதினால் புனரமைக்கப்பட்ட வீதிகள் குறுகிய காலங்களுக்குள் சேதமடையத் தொடங்கியுள்ளன.

கோணா வில் கிராமத்தில் இருந்து அக்கராயன் பிள்ளையார் கோவில் வரை புனரமைக்கப்பட்ட வீதியும் அக்கராயன் மருத்துவமனையில் இருந்து அணைக்கட்டு வீதி வழியாக ஸ்கந்தபுரம், கருமபுத் தோட்டம் பிள்ளையார் கோவில் வரை புனரமைக்கப்பட்ட இரு வீதிகளும் வெண் கிரவல் பயன்படுத்தப்பட்ட பல இடங்களில் வீதி சேதமடைந்து காணப்படுகின்றது. (5-6-350)




ஆங்கிலம் தொடர்பாடல் தேசிய வேலைத்திட்டத்தின் வடக்கு மாகாணத்திற்கான செயற்றிட்டம், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்வில் சூம் ஊடாக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்- சிவசாந்தன்)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும் மோதவுள்ளன. (5-6-90)


## சூட்சுமமாக கடத்தப்பட்ட பாலை மரக்குற்றிகள் மீட்பு

### ஒருவர் கைது

(சாவகச்சேரி)

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி டிப்பர் வாகனத்தில், மணலுக்குள் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பெருந்தொகையான பாலை மரக்குற்றிகளை நேற்று சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி டிப்பர் வாகனத்தை சோதனையிட்ட பொலிஸார் உரிய அனுமதிப்பத்திரம் இன்றி மணலை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டுக்காக சாரதியை கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றிருந்தனர்.



அதன் பின்னரே மணலுக்குள் பாலை மரக்குற்றிகளை மறைத்து எடுத்துச் சென்றிருந்தமை பொலிஸாருக்கு தெரிய வந்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-30)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழ கத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையினரின் ஏற்பாட்டில் யாழைச் சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர் ஐயாத் துரை சாந்தன் கலந்து கொள்ளும் வாசிப்பும் கலந்துரையாடல் நிகழ்வும் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (5-6)




யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை வீதியோட்டப் போட்டி இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1970 - 06 - 21

மறைவு 2023 - 02 - 15

இத்தனை விரைவாய் ஆண்டொன்று
-ஆனது
எப்படி அம்மா உமை நாம்
மறப்போம் தினமும் உம்
நினைவால் துடிக்கிறோம்
-எமை
விட்டுப் பிரிந்தாலும் எமக்காக
துடித்துக் கொண்டே இருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.



அமரர். திருமதி.
வித்தியானந்தன்
பாரதி (பவா)
(திதி.2024.03.05)


குடும்பத்தினர்
கரடிபோக்கு, கிளிநொச்சி.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 150 | 245 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 320 | 400 |
| தக்காளி | 300 | 300 | 270 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 120 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 350 | 400 |
| கரட் | 350 | 500 | 400 | 330 | 500 |
| பூசணி | 220 | 240 | 160 | 200 | 300 |
| புடோல் | 150 | 250 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 140 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 200 | 345 | 300 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 360 | 350 | 400 |
| பாகற்காய் | 400 | 350 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 240 | 170 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 265 | 400 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 220 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 320 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 360 | 450 |
| முருங்கைக்காய் | 1200 | 1250 | 800 | 1560 | 1500 |
| போஞ்சி | 400 | 250 | 350 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 120 | — | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 100 | 150 | 120 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 50-90 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 400 | 300 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 160 | 200 | 150 | 170 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 150 | 120 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | 60 |
| [illegible] | 100 | 150 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் தூதுவர்- அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு



(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் பொன்சுவா பெஸ்டட் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு கடற்றொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது கடற்றொழில் அமைச்சினால் நிறைவேற்றப்படவுள்ள புதிய கடற்றொழில் சட்டம் மற்றும் மீன்பிடி துறைமுகங்களின் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பின் போது கடற்றொழில் அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர், அமைச்சரின் ஆலோசகர் மற்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-6)

# தென்னை மரங்களை சேதப்படுத்திய காட்டுயானைகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தின் எல்லையோர கிராமமான கொங்காதரன் குடியிருப்பு பகுதியில் யானைகள் புகுந்து தென்னைகளையும் இதர பயிர்களையும் அழித்துள்ளன.

பெருமளவான காட்டு யானைகள் குறித்த குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிக்குள் புகுந்து பயன் தரும் நிலையில் உள்ள தென்னை மரங்களை சேதப்படுத்தியுள்ளன.

மிகுந்த சிரமங்களின் மத்தியில் வளர்க்கப்பட்ட தமது வாழ்வாதாரம் இடை நடுவில் சீரழிக்கப்பட்டது மிகுந்த வேதனை அளிப்பதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நாளை நமக்கானதாக மாறும். இது உயிர் சேதம் வரை தொடரலாம் எனும் ஏக்கத்துடன் தமது இரவை கழித்து வருவதாகவும் தெரிவித்தனர். (5-6-315)

# கண்காட்சியும் விற்பனைக்கூடமும்

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் வருடாந்தம் மகளிர் விழா மாகாண அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நாளை 6 ஆம் திகதி "அவளையும் உள்வாங்குங்கள்: பொருளாதார வலுவூட்டல் மூலம் பாலின சமத்துவத்தை துரிதப்படுத்துதல்" எனும் தொனிப்பொருளில் சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் சர்வதேச மகளிர்தின விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஒரு அங்கமாக பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனைக்கூடமும் நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய இரு தினங்களும் காலை 8 மணி முதல் மாலை 7.30 மணிவரை குறித்த வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (5-6)

# தமிழ்மொழி கல்வியை வழங்கும் வகுப்பறைகள் குறைப்பு

## மனோ எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)


கொழும்பில் உயர்ந்த தரத்திலான பாடசாலைகளில் தமிழ் மொழி மூலமான கல்வியை வழங்கும் வகுப்பறைகள் தொடர்ச்சியாக குறைக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து இனங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களும் ஒரே கூரையின் கீழ் கல்வியை பெற வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன் எனத் தெரிவித்தார். (5-6)

# அரசு மானியங்களை வழங்கி தவறு இழைக்கிறது

## மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்



(கொழும்பு)

இலங்கை மீண்டும் பழைய தவறுகளை செய்கின்றது என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித்குமார சுவாமி கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை மானியங்களை வழங்கும் பழைய நிலைக்கு திரும்பக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து பணத்தை பெற்று மானியங்களை வழங்குவது மீண்டும் கடன் நெருக்கடிக்குள் சிக்க வைக்கும்.

ஏனென்றால் கடனைத் திருப்பி செலுத்துவதற்கான அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கான திறமை எங்களிடம் இல்லை.

அஸ்வெசும போன்றவற்றை குறுகிய கால நன்மைக்காக பயன்படுத்தலாம்.

அரசாங்கம் சிக்கன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் இவ்வாறான திட்டங்கள் உதவக் கூடும்.

சீர்திருத்தங்களிற்கான ஆதரவை பெற உதவக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: -<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: Bsc (QS), Own Construction work (Pvt)<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி , உத்தியோகம்<br>தொ.இ: B/14048 | பிறப்பு-1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா-39<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி / தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14079 |
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: -<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்-Bsc(Civil Engineer)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு (அவுஸ்திரேலியா)<br>தொ.இ: B/14049 | பிறப்பு-1997 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: -34 உயரம் : 5' 2"<br>தகைமை/தொழில்: A/L,HNDin English (Reading).வருமானப்பரிசோதகர் (அரச) விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/14081 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: -<br>உயரம்: 5' 6" சூரி செவ் 1<br>தகைமை/தொழில்: Bcom(Bank Officer)<br>எதிர்பார்ப்பு:ஆசிரியர். அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14050 | பிறப்பு -1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: -<br>உயரம் :5' 2"<br>தகைமை/தொழில்:Bsc,Msc<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14083 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: -<br>சூரி செவ் 10 இல்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்:- A/L (வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14051 | பிறப்பு -1996 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: -<br>உயரம்: 155 CM<br>தகைமை/தொழில்: A/L,NDT (Teacher)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில், வெளிநாடு<br>தொ.இ: G/14084 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரணி முடிவை திரும்பப் பெற

## மீண்டும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள

(டில்லி)

**நாடு முழுவதும் மார்ச் 10 ஆம் திகதி ரயில் மறியல் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக விவசாயிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.**





டில்லியை நோக்கிய விவசாயிகளின் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள

நிலையிலேயே விவசாய சங்க தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "தாம் டில்லியை நோக்கி பேரணி நடத்தும் முடிவைத் திரும்பப் பெறப் போவது இல்லை எனவும் நாளை பல்வேறு மாநில விவசாயிகள் டில்லிக்கு வருகை தரவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை நாடு முழுவதும் ரயில் மறியல் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விவசாய பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த மாதம் 13 ஆம் திகதி முதல் டில்லியை நோக்கிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# மூன்று நாள் கொண்டாட்ட நிகழ்விற்கு 1,250 கோடி செலவிட்ட முகேஷ் அம்பானி

## கலந்து கொண்ட 1000 இற்கும் மேற்பட்ட பிரபலங்கள்

(டில்லி)

ஆனந்த் அம்பானி திருமணத்தின் முன்னைய கொண்டாட்டத்திற்காக முகேஷ் அம்பானி 1250 கோடி செலவு செய்துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



Reliance Industries Ltd தலைவரும் நிர்வாக இயக்குநருமான முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானிக்கும் தொழிலதிபர் வீரேன் மெர்ச்சன்ட்டின் மகள் ராதிகா மெர்ச்சன்ட்டுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் மும்பையில் உள்ள அன்டாலியா இல்லத்தில் நிச்சய தார்த்தம் நடைபெற்றது. இவர்களின் திருமணம் வருகின்ற ஜூலை 12 ஆம் திகதி மும்பையில் நடைபெற உள்ளது.

இந்நிலையில், கடந்த 1ஆம் திகதி குஜராத்தின் ஜாம் நகரில் திருமணத்தின் முந்தைய கொண்டாட்டம் தொடங்கியது.

இதனால், ஜாம் நகரில் உள்ள விமான நிலையம் 10 நாட்களுக்கு மட்டும் சர்வதேச விமான நிலையமாக அங்கீகாரம் பெற்றது.

இதனால், ஜாம் நகருக்கு சிறப்பு விருந்தினர்களாக 1000 பிரபலங்கள் வருகை புரிந்தனர்.

முதல் நாளான மார்ச் 1 ஆம் திகதியில் அமெரிக்க பாப் பாடகியான ரிஹானாவின் இசைக் கச்சேரி நடைபெற்றது. இதற்கு மட்டுமே ரூ.75 கோடியை அம்பானி செலவு செய்துள்ளார்.

இரண்டாம் நாளில் ஜாம்நகரில் உள்ள 3,000 ஏக்கர் வனத்தை விருந்தினர்கள் சுற்றி பார்த்தனர். மேலும், பல்வேறு இசை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. அதேபோல மூன்றாம் நாளில் யானைகளை பார்க்க விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

விருந்தினர்களின் உணவுக்காக இந்தியா, தாய்லாந்து, மெக்சிக்கோ என பல்வேறு நாடுகளை சேர்ந்த 2,500இற்கும் மேற்பட்ட உணவு வகைகள் பரிமாறப்பட்டன. கிட்டத்தட்ட உணவுக்கு மட்டுமே ரூ.130 கோடி செலவிடப்பட்டது.

அம்பானி திருமணத்தின் முன்னைய் கொண்டாட்டத்திற்காக கடந்த 3 நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக ரூ.1,250 கோடி செலவிடப்பட்டுள்ளது. (5-6)

# குவைத் பாரா
## தேர்தல் திகதி

(குவைத்)

குவைத்தில் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வளம் மிக்க நாடான

குவை
குழப்
மன்ற
நடை
வதும்

# ஹெய்ட்டி சி
## 3500 கைதி



(போர்ட்-ஓ-பிரினஸ்)


ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் உள்ள பிரதான சிறைச்சாலை மீது ஆயுதமேந்திய குழுவொன்று அண்மையில் நடத்திய தாக்கு

தலில்
கைதிக
தெரிவி
சுமா
கைதிக
குறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பெறமாட்டோம்

## ...ுள்ள விவசாயிகள்



# பாராளுமன்ற
# ...திகதி அறிவிப்பு


பாரா
றவுள்
டான

குவைத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால் அடிக்கடி பாராளுமன்றம் கலைக்கப்படுவதும் தேர்தல் நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவதும் அரங்கேறி வருகிறது.

சுமார் 42 லட்சம் மக்கள் தொகை கொண்ட குவைத்தில், கடந்த மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# ...ட்டி சிறையிலிருந்து
# ...கைதிகள் தப்பியோட்டம்



கர்
ள்ள
மீது
ற்று
க்கு

தலில் 3,500இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 4000 இற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ள குறித்த சிறைச்சாலையில், சிறைக் கைதிகளை விடுவிக்கும் விதமாகவே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதோடு, மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு தப்பிச் சென்ற கைதிகளில் கடந்த 2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற அந்நாட்டு ஜனாதிபதி ஜோவெனல் மோஸசின் கொலை வழக்குடன் தொடர்புடைய நபர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இஸ்ரேல்-ஹமாஸ் போரை நிறுத்த போப் பிரான்சிஸ் வலியுறுத்து

(வோஷிங்டன்)

காசாவில் நடைபெற்று வரும் போரை நிறுத்துமாறு போப் பிரான்சிஸ் வலியுறுத்தி உள்ளார். மூச்சுக்குழாய் அழற்சி காரணமாக பாதிக்கப்பட்ட போப் பிரான்சிஸ் தற்போது உடல்நலம் தேறி வருவதை அடுத்து பிரார்த்தனை கூட்டம் ஒன்றில் இஸ்ரேஸ் - ஹமாஸ் போர் முடிவு குறித்து தனது கருத்தை தெரிவித்தார்.


இது குறித்து பேசும் போது, "இஸ்ரேல் -பாலஸ்தீனம் விவகாரத்தில் தினந்தோறும் பொது மக்கள் பாதிக்கப்படுவது, ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பது, படுகாயமடைவது, அகதியாவது உள்ளிட்டவை என் மனதை வேதனையில் ஆழ்த்துகிறது. இப்படி செய்வதை வைத்து சிறப்பான உலகை கட்டமைக்க முடியும் என நினைக்கின்றீர்களா? உண்மையில் அமைதியை நிலை நாட்ட முடியும் என்று நினைக்கின்றீர்களா? போதும்! எல்லோரும் சொல்வோம் போதும்! நிறுத்துங்கள்!" என்று தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களில் போப் பிரான்சிஸ்"க்கு பலமுறை உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதன் காரணமாக கடந்த



ஆண்டு டிசெம்பர் மாதம் துபாயில் நடைபெற்ற சுற்றுச்சூழல் கருத்தரங்கில் கலந்து கொள்வதை போப்பிரான்சிஸ் ரத்து செய்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலில் 90 பாலஸ்தீனியர்கள் பலி



(காசா)

காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 24 மணிநேரத்தில் மாத்திரம் 90 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தாக்குதலில் 177 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் இதனால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த போரில் இதுவரை உயிரிழந்த பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 410 ஆக உயர்ந்துள்ளது எனவும் 71 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே இடம்பெற்று வரும் போரானது சுமார் 5 மாதங்களாக நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தென்கொரியாவில் தொடரும் மருத்துவர்கள் வேலை நிறுத்தம்



(சியோல்)

தென்கொரியாவில் மருத்துவ பாடசாலைகளில் மாணவர்களை கூடுதலாகச் சேர்க்கும் திட்டத்தை எதிர்த்து அங்குள்ள மருத்துவர்கள் சோலில் நேற்று முன்தினம் பெரியளவிலான பேரணியில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் பெப்ரவரி 29 ஆம் திகதிக்குள் அதனை நிறுத்தி தங்களின் பணிக்குத் திரும்பாவிட்டால் சட்ட ரீதியான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தென்கொரிய அரசாங்கம் ஏச்சரித்து இருந்தது.


எனினும், மருத்துவ உரிமங்கள் பறிக்கப்படும் என்பதோடு வழக்குத் தொடுக்கப்படும் அபாயத்தையும் பொருட்படுத்தாது அவர்கள் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க முன்னுரிமை அளிக்கப்படும்

(கொழும்பு)

**விவசாய சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பயிர்கள் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட போட்டித் தன்மை மிக்க விவசாயக் கைத்தொழில் துறையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப் படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டை மீளக்கட்டியெழுப்புவதில் பல சவால்களை கடக்க வேண்டியுள்ள போதிலும் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (5-6)

# மூன்று லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் பயிர் இழப்பு




(கொழும்பு)

பெரும்போக நெல் அறுவடையின் போது, ஏற்பட்டுள்ள இழப்பீடு 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இதன்படி, பெரும்போகத்தின் 3 லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் பயிர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர் நீண்டகாலமாக பயிரிடப்பட்டிருந்தாலும் அது எப்போது விளையும் என்ற புரிதல் இல்லாமையே இதற்கு பிரதான காரணமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பயிர்ச் சேதங்களால் ஏற்பட்டுள்ள இழப்பு பில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதி என மதிப்பிடப்பட்டுள்ளது. (5-6)

# சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை நிதி உதவி

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தில் இருந்து நாட்டின் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இரண்டரை மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தொகை அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றுக்காக வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் 3 நடமாடும் அம்சமும் இதில் உள்ளடங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு அவசர நிலையிலும் தேவையான பிரதேசங்களில் சுகாதார சேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள இந்த நடமாடும் வாகனங்களின் பெறுமதி ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (5-6)

# சொக்லேட் பொதியில் 5 கிலோ ஐஸ் போதை

## ஒருவர் கைது

(கொழும்பு)

கிரிபத்கொட பகுதியில் சொகுசு காரொன்றை சோதனையிட்ட போது, சொக்லேட் உறைகளில் பொதி செய்யப்பட்ட சுமார் ஐந்து கிலோ ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். கைதான நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, தற்போது துபாயில் பதுங்கியிருக்கும் போதைப் பொருள் வியாபாரிகளான நிபுன மற்றும் நந்தசேன ஆகியோரின் அறிவுறுத்தலிலேயே, இவ்வாறு போதைப்பொருள்ள கடத்தப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (5-6)

# இன்று ஒரு தகவல் 56



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனித மூளையும் மாபெரும் இயற்கையும்!

சாலமோன் என்பவர் மிகப்பெரிய ஞானி.

அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது!

இந்த உலகத்தில் நல்லவன் துன்பப்படுகிறான். கெட்டவன் சந்தோசமாக இருக்கிறான் இது ஏன்?

சிலரிடம் செல்வம் நிறைய இருக்கு.ஆனால் குழந்தை இல்லை.

சிலர் சாப்பாட்டிற்கே சங்கடப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு நிறைய குழந்தைகள் பிறக்கிறது இது ஏன்?

இது கடவுள் செயல் என்று சில பேர் சொல்லலாம். அப்படி என்றால் இந்தச் செயல் நியாயமா?

சரி. இது சாத்தானோட செயல் என்று சிலர் சொல்லலாம். அப்படி என்றால் கடவுள் சக்தியை மீறியும் சில செயல் நடக்க முடியுமா?

இப்படி எல்லாம் அவருக்கு சந்தேகம்.

சாலமோன் யோசித்து யோசித்து பார்த்தார்.

ஒன்றும் புரியவில்லை. பல நாள் சிந்தித்து பார்த்தார். ஒன்றும் புரியவில்லை.

வீட்டுக்குள்ளே இருந்து யோசித்து பார்த்தார், வீதியிலே நடந்து நடந்து யோசித்து பார்த்தார், கடற்கரைக்கு போய் தண்ணி ஓரமாக நடந்து பார்த்தார். ஒன்றும் விடை கிடைக்கவே இல்லை.

சாலமோன் ஞானி தன் முயற்சியை கைவிடவே இல்லை. எப்படியும் இதுக்கு விடை கண்டுபிடித்தே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டி கொண்டார்.

காலையிலே எழுந்திரிக்க வேண்டியது. கடற்கரைக்கு போக வேண்டியது. யோசிக்க வேண்டியது. சாயந்தரம் வீட்டுக்கு வர வேண்டியது. தினமும் இப்படியே செய்து கொண்டு இருந்தார்.

ஒரு நாள் கடற்கரையில் நடந்து கொண்டு இருந்த பொழுது ஒரு சின்னப் பையன் கொட்டாங்குச்சி ஒன்றை வைத்து கொண்டு விளையாடிக் கொண்டு இருப்பதை பார்த்தார். எப்படி?

கடல் தண்ணியை கொட்டாங்குச்சியாலே பார்த்தார். சாயந்தரம் திரும்பி வரும் போதும் பார்த்தார். அப்பவும் அந்தப் பையன் அதே வேலையை செய்து கொண்டு இருந்தான்.

ஞானிக்கு சந்தேகம்.

அந்தப் பையனை கூப்பிட்டார். விசாரித்தார். தம்பி இருட்டி போய் விட்டது வீட்டிற்கு போகவில்லையா? என்று கேட்டார். அதற்கு அந்த பையன் உங்க வேலை முடிந்து போய்விட்டது போல் இருக்கு. அது தான் வீட்டிற்குப் போகிறீர்கள்.

என் வேலை இன்னமும் முடியவில்லை. அதை முடித்து விட்டுத் தான் வீட்டிற்குப் போவேன் என்று சொன்னான். தம்பி அது என்ன வேலை? என்று கேட்டார் ஞானி. அதற்கு அவன் இந்த கடல் தண்ணி எல்லாவற்றையும் இந்த கொட்டாங்குச்சி யாலே இறைத்து கரையிலே ஊற்றுகிற வேலை என்று சொன்னான்.

ஞானி ஆச்சரியப்பட்டார். சிரித்தார். தம்பி! நீ எவ்வளவு? கடல் தண்ணி எவ்வளவு? உன் கையில் இருக்கிற கொட்டாங்குச்சி எவ்வளவு? அதை வைத்துக் கொண்டு எப்படி இறைக்க முடியும்? என்று கேட்டார்.

அந்தப் பையன் சொன்னான். நீங்கள் எவ்வளவு? இந்த இயற்கை எவ்வளவு? உங்க மூளை எவ்வளவு? இதை வைத்து கொண்டு அதை அளந்து விட முடியும் என்றால் நான் இந்த கொட்டாங்குச்சியை வைத்து கொண்டு கடல்தண்ணியை இறைத்து விட முடியாதா?

நீங்களும் முயற்சி செய்யுங்க. நானும் முயற்சி செய்கிறேன் என்று சொல்லி கொண்டு ஓடிப்போய் விட்டான்.

மறுபடியும் தண்ணி இறைக்க ஆரம்பித்து விட்டான். சாலமோன் ஞானிக்கு விடை கிடைத்து விட்டது. என்ன விடை கிடைத்தது. மனிதன் தன் மூளையைக் கொண்டு இயற்கையின் செயல்களை அளக்க முயற்சி செய்கிறது கொட்டாங்குச்சியைக் கொண்டு கடல்தண்ணியை இறைக்கிறதற்கு முயற்சி செய்கிற மாதிரி. ஞானிக்கு ஐயம் மறைந்தது. அதே விநாடி சிறுவனும் மறைந்து விட்டான். இதில் இருந்து என்ன தெரிகிறது. இயற்கையோட பல செயல்களுக்கு மனிதனால் இன்னமும் அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லையே.

ஒரு சின்ன உதாரணம் நம்ம ஊரில் ஒரு ஞானி இருந்தார்.

அவரிடம் ஒருத்தன் வந்து கேட்டான். ஐயா எனக்கு புத்திர பாக்கியம் இல்லை. ஏதாவது வழி சொல்லுங்க என்றான். அதற்கு அவர் சொன்னார். இராமேஸ்வரத்திற்கு போய்விட்டு வா.. குழந்தை பிறக்கும் என்றார். இதற்கு அவன் சொன்னான். என் சொந்த ஊரே இராமேஸ்வரம் தான் என்று.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவன் இராசரத்தினம் பிரதீபனின் அனுசரணையில் சிறுப்பிட்டிப் பகுதியில் 10 பயனாளிகளுக்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி கோழிக்குஞ்சுகள் மற்றும் தீவனம் வழங்கி வைக்கப்பட்டன.

## கல்மடு, பிரமந்தனாறு குள சிறுபோக கூட்டம் இன்று

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட கல்மடுக் குளம் மற்றும் பிரமந்தனாறு குளம் ஆகியவற்றுக்கான சிறு போக பயிர்ச்செய்கை குழு கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலகம் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளரின் பங்குபற்ற லுடன் நடைபெற உள்ளது

தொடர்ந்து பகல்11 மணிக்கு பிரமந்தனாறு குளத்திற்கான சிறுபோக குழுக் கூட்டம் பிரமந் தனாறு பொதுநோக்கு மண்டப த்திலும் நடைபெற உள்ளது. குறி த்த கலந்துரையாடலில் சகல ரையும் தவறாது கலந்து கொள் ளுமாறு கண்டாவளை பிரதேச செயலகம் அறிவித்தல் விடுத் துள்ளது. (5-6-315)

# மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கு 5 ஆயிரம் தபால் கடிதங்கள்

(மன்னார்)

"எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள்" எனும் தொனிப் பொருளில் நிலத்தை இழந்த மக்க ளின் குரல் அமைப்பின் ஊடாக வட மாகாண ரீதியாக இராணுவம், கடற்படை மற்றும் ஏனைய திணை க்களம் வசம் இருக்கும் மக்களின் காணிகளை விடுவிக்ககோரி தபால் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்கும் நிகழ்வு நேற்று மன்னா ரில் மெசிடோ நிறுவனத்தின் ஏற் பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம் பெற்றது.

வடமாகாண ரீதியாக மக்களின் காணிகளை அரசாங்கம் மற்றும் முப்படையினர் கையகப்படுத்தி குறித்த காணிகளில் வணிக செயற் பாடுகள் மற்றும் விவசாய செயற் பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிலை யில் காணிக்கு சொந்தக்காரரான மக்கள் காணிகள் இன்றியும் வாடகை வீடுகளிலும் வசித்து வருகி ன்றனர்.

இதன் அடிப்படையில் மக்களின் காணிகளில் குடியிருக்கும் படையி னர் காணிகளை மக்களுக்கு விடுவித்து வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் காரியாலயத்திற்கு ஐயாயிரம் தபால் கடிதங்கள் அனுப்பி வைக்கும் முகமாக குறித்த நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றது. (5-6-285)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3055

### சுகி




### சஞ்சனா




### நிவேதா





### தரசுதா




### ஜெயம்




### ரவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 423





ளில் உள்ளவர்கள் துரோகிகளாகி விட்டார்கள். சக்கரவர்த்திக்கும் பட்டத்து இளவரசருக்கும் தங்களுக்கும் விரோதமாகச் சதி செய்யத் தொடங்கி விட்டார்கள். தங்கள் தமையனாருக்குப் பட்டம் இல்லை என்று சொல்லிவிட்டுச் சிவபக்தி வேஷதாரியான உருத்திராட்சப் பூனை மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவது என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். பழுவேட்டரையர்களும் சம்புவரையர்களும் இரட்டைக் குடை இராஜாளியாரும் மழபாடி மழவரையரும் மற்றும் இவர்களைப் போன்ற வேறு பல துரோகிகளும் இந்தக் கூட்டுச் சதியில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பற்றி நாம் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. வடதிசைச் சைன்யமும் தென்திசைச் சைன்யமும் நம் வசத்தில் இருக்கின்றன. திருக்கோவலூர் மிலாடுடையாரும் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரும் நம் பக்கம் இருக்கிறார்கள். இவர்களுடைய உதவிகளைக் கொண்டும் சைன்யத்தின் துணைகொண்டும் துரோகிகளின் சதியை ஒரு நொடியில் சின்னாபின்னப் படுத்தி விடலாம். ஆனால் எதிரிகளுக்கு அதிக காலம் இடங்கொடுத்து விடக்கூடாது. துரோகிகளின் சூழ்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதை முன்னிட்டுத் தங்களை உடனே காஞ்சிக்கு அழைத்து வரும்படியாகத் தங்கள் தமையனாரும் பாட்டனாரும் என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள். இச்சமயத்தில் நீங்கள் சகோதரர்கள் இருவரும் பிரிந்திருக்கலாகாது என்றும் ஒரே இடத்தில் இருப்பது மிக அவசியம் என்றும் தங்கள் பாட்டனார் கருதுகிறார். இன்னும் தங்கள் தமையனாரின் உள்ளத்தில் இருப்பதையும் சொல்லிவிட விரும்புகிறேன். அவருக்கு ஒரே இடத்தில் இருந்து இராஜ்யம் ஆளுவதில் விருப்பம் இல்லை. கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் கப்பலேறிச் செல்ல வேண்டுமென்றும் அந்த நாடுகளையெல்லாம் வென்று சோழர் புலிக்கொடியைப் பறக்கவிட வேண்டுமென்றும் அவர் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார். வடநாட்டுப் படையெடுப்புக்குப் பழுவேட்டரையர்கள் முட்டுக்கட்டை போட்டதிலிருந்து அவருடைய போர் வெறி ஒன்றுக்குப் பத்து மடங்கு ஆகியிருக்கிறது. ஆகையால் தாங்கள் காஞ்சி வந்து சேர்ந்ததும் தஞ்சைக்குப் படையெடுத்துச் சென்று சதிகாரர்களையெல்லாம் அதம் செய்து ஒழித்து விட்டுச் சோழ சிம்மாசனத்தில் தங்களை அமர்த்தி முடிசூட்டி விட்டு...

இத்தனை நேரம் கவனத்துடனும் மரியாதையுடனும் கேட்டு வந்த இளவரசர் இப்போது தம் செவிகளைக் கையினால் மூடிக் கொண்டு, "வேண்டாம்! அத்தகைய விபரீத வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். சோழ சிம்மாசனத்துக்கும் எனக்கும் வெகுதூரம்!" என்றார்.

"தங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நான் சொல்லவில்லை. அது தங்களுடைய தமையனார் இஷ்டம் தங்கள் இஷ்டம். நீங்கள் சகோதரர்கள் விவாதித்துத் தீர்த்துக் கொள்ள வேண்டியது. ஆனால் சதிகாரர்களை ஒழிப்பதில் இரண்டு பேரும் ஒன்றுபட வேண்டியது அவசியம். உடனே தாங்கள் காஞ்சிக்குப் புறப்பட்டு வாருங்கள். (தொடரும்)

இளவரசர் பார்த்திபேந்திரனைப் பார்த்து, "என் தமையனாரும் பாட்டனாரும் என்ன செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்? கேட்க ஆவலாயிருக்கிறேன்" எனறார்.

"இளவரசே! சோழ ராஜ்யம் பெரிய அபாயத்துக்குள்ளாகியிருக்கிறது. இது தங்களுக்குத் தெரிந்திருக்கும்."

"ஆம், ஐயா! சக்கரவர்த்தி நெடுநாளாக நோய்ப்பட்டிருக்கிறார்."

"அபாயம் அது மட்டுமல்ல. சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது. பெரிய அதிகாரங்க

---



# சிறுவர் அரங்கம்

## கைத்தொழில்



சிறிது காலத்திற்கு முன்பு மகத நாட்டை ராமதத்தன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். இவரது மகன் சோமதத்தன். ஏதாவது ஒரு கைத்தொழிலை கற்றுக்கொள்ளும்படி மகனிடம் கூறினார் மன்னர். இதையடுத்து சோமதத்தன் கம்பளம் நெசவு செய்யும்தொழிலை கற்றுக்கொண்டான். விரைவில் அந்த தொழிலில் சிறந்த திறமையும் பெற்றான்.அவன் தயாரிக்கும் கம்பளங்கள் கலை நயம் மிக்கதாகவும் அபூர்வமான வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் இருந்தன.

இளவரசன் சோமதத்தனுக்கும் அங்கத நாட்டு இளவரசி சாயாதேவிக்கும் திருமணம் நடைபெற்றது.சாயாதேவி புத்திசாலித்தனம் மிக்கவள். இவளுக்கும் பல்வேறு கலைகளில் தேர்ச்சி உண்டு.

ஒரு நாள் இளவரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். புலி ஒன்றை துரத்திச் சென்ற போது தனது படை வீரர்களை பிரிய நேரிட்டது. அத்துடன் அவன் வழி தவறி காட்டின் இன்னொரு பகுதிக்குச் சென்று விட்டான்

அங்கு திருடர் கூட்டம் ஒன்று இருந்தது. அந்த கூட்டத்திடம் இளவரசன் சிக்கிக்கொண்டான். அவர்கள் பயங்கரமான கொள்ளையர்கள். அவர்களிடம் [illegible] வது சிக்கினால், [illegible] ட்களை பிடுங்கிக் கொண்டு அவர்களை கொன்று விடுவது வழக்கம்.

அது போல இளவரசனிடம் இருந்து நகைகள் மற்றும் பொருட்களை கொள்ளையடித்த பின்னர் அவனை கொல்ல முயன்றனர்.

அப்போது அவர்களிடம் இளவரசன் கெஞ்சினான். தனக்கு நெசவுக் கலையின் நுணுக்கம் [illegible] கம்பளங்களை விற்றால் அதிக பணம் கிடைக்கும் என்றும் கூறினான். இதையடுத்து அவனுக்கு உயிர்பிச்சை அளித்தனர்.

கம்பளம் நெசவு செய்யும் பணியும் கொடுக்கப் பட்டது. இளவரசன் வித விதமாக கம்பளங்கள் செய்து கொடுத்தான். அவை நல்ல விலைக்கு விற்றன. இதையடுத்து கொள்ளைக்கூட்டத் தலைவன் மகிழ்ச்சி அடைந்து இளவரசனிடம் மேலும் கம்பளங்கள் நெசவு செய்யும்படி கூறினர். இளவரசனும் அதன்படி வித விதமான கம்பளங்கள் செய்தான்.

இதற்கிடையில் இளவரசனை காணாமல் மன்னனும் இளவரசியும் கவலை அடைந்தனர். படை வீரர்களை பல இடங்களுக்கும் அனுப்பி இளவரசனை தேடினார்கள்.

இந்த நிலையில் ஒரு நாள் கடை வீதிக்கு தோழியுடன் இளவரசி சென்றாள். அங்கு ஒரு கடையில் இருந்த கம்பளத்தை பார்த்ததும் இளவரசி ஆச்சரியம் அடைந்தாள். அது இளவரசன் தயாரித்தது என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

உடனே அந்த கடைக்காரரிடம் அதுபற்றி விசாரித்தாள். பக்கத்து நாட்டில் இருந்து சிலர் இதை கொண்டு வந்ததாக அவன் தெரிவித்தான்.

இளவரசி அந்த கம்பளத்தை வாங்கிப்பார்த்தாள். அதில் சில ரகசிய குறியீடுகளும் வரைபடங்களும் மறைந்து இருப்பதை புரிந்து கொண்டாள்.

தான் எந்த இடத் தில் சிறை வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை இளவரசன் ரகசியமாக அதில் வரைந்து இருந்தான்.

இதன்படி அந்த இடத்திற்கு படைகளை அனுப்பினார் மன்னர். படைகளும் அங்கு சென்று கொள்ளைக் கும்பலை விரட்டியடித்து விட்டு இளவரசனை மீட்டு வந்தனர்.

இளவரசனின் புத்திசாலித்தனம், அதை புரிந்து கொண்டு செயற்பட்ட இளவரசியின் அறிவுத்திறன் இரண்டும் சேர்ந்து கொள்ளையர்களிடம் இருந்து இளவரசனை காப்பாற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை கிடைக்கிறது.

– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வார்த்தைப் பிரயோகங்கள் நிதானமாக இருக்க வேண்டும்

இராமர் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்வதற்கும் பட்டாபிஷேகம் தடைப்பட்டுப் போவதற்கும் காரணம் கைகேயி கேட்ட வரம் அன்று.

மாறாக, மந்தரையின் கூன் முதுகில் பால இராமர் மண் உருண்டைகளைப் போட்டதன் காரணமாக, இராமர் மீது கூனி கொண்ட கோபமே அத்தனைக்கும் காரணம் என்பது புரிதற்குரியது.

இங்கு இராமர் காடு சென்றதால் அவர் பட்ட இன்னல்கள் கொஞ்சமல்ல.

சீதாப்பிராட்டியை இராவணன் கடத்திச் சென்றதும் யுத்த அறத்தை மீறி மறைந்திருந்து வாலியைக் கொன்ற பழியும் இராமரை வந்தடைந்தது.

இதையும் கடந்து, இராவண சேனையை அழித்து இலங்காபுரியை எரியூட்டுகின்ற வன்செயலும் நடக்கலாயிற்று.

ஆக, அவதார புருஷராக இராமர் இருந்த போதிலும் அவர் தன் அறியா வயதில் கூனியின் முதுகில் மண் உருண்டையைப் போட்டதன் விளைவுதான் மேற்கூறிய அத்தனையும்.

எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் யாரையும் நாம் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதுதான் இராமாயண இதிகாசம் நமக்கு உணர்த்துகின்ற தத்துவம்.

ஆக, இராமாயணம் உணர்த்துகின்ற மேற்போந்த தத்துவத்தை நாம் ஒவ்வொருவரும் நம் சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் பின்பற்றுவது கட்டாயமானது.

இதை நாம் கூறும்போது, இது இப்போது எதற்கானது என்று யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் இரண்டு சம்பவங்களை நாம் முன்வைக்க வேண்டியுள்ளது.

அதாவது, தமிழக மீனவர்கள் ஈழத்துக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் வளங்களைக் கொண்டு செல்லுகின்ற சம்பவங்கள் தொடர்வதன் காரணமாக, எங்கள் கடற்றொழிலாளர்களும் தமிழகத்து மீனவச் சகோதரர்களும் முரண்படுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

இத்தகைய முரண்பாட்டை ஆரம்ப கட்டத்திலேயே முடிவுக்குக் கொண்டுவராததன் காரணமாக, இரண்டு தரப்புகளும் கடும் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுகின்ற அளவில் நிலைமை வந்துற்றது.

ஆம், தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் நம் கடற்றொழிலாளர் அமைப்புகளும் இணைய வழி ஊடாக வாக்குவாதம் செய்து கொள்ள, இரு தரப்பும் கடும் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டன.

இத்தகைய நிலைமை ஈழத் தமிழர்களின் விடயத்தில் கணிசமான பாதகத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இதேபோன்று சாந்தனின் மரணம் தொடர்பில் வடக்குக் கிழக்கு சிவில் அமைப்புக்கள் விடுத்த அறிக்கையை ஊதிப்பெருக்க, இந்தியாவுக்கு இறுதி எச்சரிக்கை செய்வதுபோன்ற அளவுக்கு வார்த்தைப் பிரயோகங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலைமையானது எங்கள் மீதான இந்தியாவின் நட்பு பாதிப்படைய, இலங்கை ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் எங்கள் மீதான அடக்குமுறையை விஸ்தரிப்பதற்கு அது வழிவகுக்கும்.

எனவே வார்த்தைப் பிரயோகங்களில் நாம் அனைவரும் நிதானமாக நடக்க வேண்டும்.

இதைவிடுத்து எம் இனத்தின் எதிர்காலம் பற்றிய தூரநோக்கு இல்லாமல், உணர்ச்சிகளுக்கு மட்டும் முதன்மை கொடுத்து, வார்த்தைகளைப் பிரயோகிக்கும்போது அதனால் ஒட்டுமொத்தத் தமிழினமும் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்ற மிக மோசமான நிலைமை ஏற்பட்டுவிடும் கவனம்.

# நாட்டின் வளங்களை சூறையாடியோரை பாராளுமன்றம் பாதுகாக்கின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச காட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஊழல்வாதிகளை பாதுகாத்து, திருட்டு, இலஞ்சம், மோசடிகளை தற்காத்து வருகின்றனர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். நாட்டில் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் மூன்று தூண்களாக நிறைவேற்று அதிகாரம், பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை இருந்தாலும் அவற்றில் பெயரளவில் மாத்திரம் ஜனநாயகம் நடைமுறையில் இருக்கின்றது.

113 எம்.பிக்கள் கெஹெலியவை பாதுகாக்க கைகளை உயர்த்தினர்

சில மாதங்களுக்கு முன்னர் தரம் குறைந்த மருந்து வியாபாரம் பற்றிய உண்மையான தகவல்கள் தெரியவந்த பின்னர், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த போது, அவரை பாதுகாக்க 113 பேர் கைகளை உயர்த்தினர்.

நாட்டை ஆட்சி செய்யும் ஜனாதிபதியும் கெஹெலியவை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார். தற்போது ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முக்கியம் தெரியவந்துள்ளது. நீதிமன்றம் வரிசையாக திருடர்களை பிடித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது.

நீதிமன்றத்தில் மோசடிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் வெளிப்பட்டு வந்தாலும் பாராளுமன்றத்தில் அந்த திருடர்களை பாதுகாக்க பெரும்பான்மையான உறுப்பினர்கள் முன்நோக்கி வந்தனர்.

நாடு 90 பில்லியன் டொலர் கடனாளியாக மாறியுள்ளது.

பிரதிபலன்கள் கிடைக்காத, நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்தாத திட்டங்களுக்காக அதிகளவில் கடனை பெற்றமை, பாரிய ஊழல், மோசடிகள் காரணமாக நாடு 90 பில்லியன் டொலர் கடனாளியாக மாறியுள்ளது.

ஒரு குடும்பம் நாட்டின் வளங்களை கொள்ளையிட்டு, நாட்டின் வளங்களை அழித்து தமக்கு தேவையான வகையில் கொடுக்கல், வாங்கல்களை செய்துகொண்டதன் காரணமாகவே அதிகளவான பெறுமதி சேர் வரி, வருமான வரி போன்றவற்றை செலுத்த நேரிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நாட்டை அழித்த நபர்களின் வெளிப்படைத் தன்மையும் நீதிமன்றத்தில் நிறுத்தி, தண்டனை வழங்கி, கொள்ளையிட்ட வளங்களை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வரப் போவதாகவும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ம-7)

# சகல பாகுபாடுகளையும் களைந்து சமாதானத்தை நிலைநிறுத்துவோம்

## சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன

(கொழும்பு)

வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலைமை, சமாதானத்தை ஊக்குவிப்பது மற்றும் அனைத்து வகையிலான பாகுபாடுகளையும் ஒழிப்பது போன்றவற்றில் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது என நடுநிலைக் கொள்கைக்கான உறுப்பு நாடுகளின் பாராளுமன்றங்களின் தலைவர்களுக்கான மாநாட்டில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

குறித்த மாநாட்டில் நிகழ்நிலை மூலம் உரையாற்றிய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

"சமாதானம் மற்றும் கலந்துரையாடலை பலப்படுத்துவதில் பாராளுமன்ற ஒத்துழைப்பின் வகிபாகம்" என்ற தொனிப்பொருளில் துருக்மெனிஸ்தான் பாராளுமன்றத்தினால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பல்வேறு நாடுகளுடைய பாராளுமன்றங்களின் சபாநாயகர்கள், பிராந்திய, சர்வதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புவது மற்றும் மோதல்களைத் தடுப்பது போன்றவற்றில் பாராளுமன்றங்களின் வகிபாகம் மிகவும் முக்கியமானது என இங்கு உரையாற்றிய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்தினார்.

"மேலும் ஜனநாயக மற்றும் பிரதிநிதித்துவ அரசியல் கட்டமைப்பானது கலகங்களைத் தடுப்பதற்கு உதவுவது மாத்திரமன்றி மோதல்களுக்குப் பின்னர் சமாதானத்தைமீண்டும்உருவாக்குவதற்கும் முக்கியமானது என்றார். (ம-7)

# வயாவிளான் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(வயாவிளான்)

யாழ். வயாவிளான் மத்திய கல்லூரியின் 2024ம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல்-01.30 மணி முதல் கல்லூரி மைதானத்தில் மேற்படி கல்லூரியின் அதிபர் வி.ரி.ஜயந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானலிங்கம் ஆதவன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதர் அரசகேசரி சிறப்பு விருந்தினராகவும், வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் முரளிதரன், வலிகாமம் வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நடராஜா கஜேந்திரன், பழைய மாணவர் அப்புத்துரை பாலகிருஷ்ணன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

# மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

## மட்டக்களப்பில் சம்பவம்

(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது நேற்று அதிகாலை சுமார் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் எருவில் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவார்.

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது. நண்பர் ஒருவரின் பிறந்த நாளிற்கு சென்றுவிட்டு வருகை தந்த நிலையில் வேககட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி அருகில் இருந்த மரம் ஒன்றில் மோதுண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் பலத்த காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதன் போது மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லும் வழியில் குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளதுடன், மற்றைய இளைஞர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15

சில தமிழ் அறிஞர்கள், பிராமி என்பது தமிழர்களது எழுத்து முறை யென்றும் அதையே அசோகர் மாற்றம் செய்து பிராகிருதம் எழுதக் கூடிய எழுத்து முறையாக உரு வாக்கினார் எனக் கருதுகின்றனர். மேலும் அவர்கள் பிராமியை "தமிழி" என அழைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.

தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் குகைப்படுக்கைகள், மட்கல ஓடு கள், முதுமக்கள் தாழிகள், நாண யங்கள், முத்திரை அச்சுக்கள், மோதிரங்கள் ஆகியவற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. தற்போ தைய தென்இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களான தமிழ்நாடு, கேரளம் மற்றும் இல ங்கை, எகிப்து, தாய்லாந்து போன்ற இடங்களிலும் தமிழ்ப் பிராமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பம் (மூலம்) பற்றிப் பல கருத்துக்கள் காணப்படுகி ன்றன. ஆய்வுக் கட்டுரைகள் தமிழி எழுத்து முறை கி.மு5 ஆம் நூற் றாண்டு காலத்துக்குரியன எனவும் மற்ற பிராமி எழுத்து முறைகள் கி.மு 3 ஆம் நூற்றாண்டு காலத் துக்குரியன எனவும் அதாவது அசோகருக்கு பிற்பட்ட அல்லது ஆரம்ப மௌரியப் பேரரசு (சுமார் கி.மு 322-185) காலத்துக்குரி யவை என பொதுவாகக் கருதப்படு கின்றன. சில ஆரம்பகால எழுத்து முறைகள் கி.மு 3 ஆம் நூற் றாண்டு முதல் கி.பி 1 ஆம் நூற் றாண்டு காலத்துக்குரியனவாக வுள்ளன.

இதிலுள்ள பல பிராமி எழுத்து முறைகளுள் தமிழ்ப்பிராமி பட்டிப் புரலு எழுத்து முறைக்கு நெருங் கியதாயுள்ளது (படம் 1 ஐப் பார்க் கவும்). தமிழ்ப்பிராமி வழமை யான பிராமியிலிருந்து வேறு படுத்திக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் எழுத்து முறை தமிழர் களின் ஆரம்ப வரலாற்றுடனும் அவர்களின் சங்க இலக்கியம் போன்ற இலக்கிய உருவாக்கத் திலும் பயன்பட்டது. தமிழ்ப்பிராமி தற்போதைய தமிழ் எழுத்து முறை, மலையாள எழுத்துமுறை என்பனவற்றின் முன்னைய முறை யான வட்டெழுத்தின் முன்னோ டியாகும்.

தென்புலப்புள்ளி முறையின் படி, எந்தக் குறுங்கோடும் போடாத எழுத்து அகர உயிர் மெய்யையும் புள்ளி போட்ட எழுத்து மெய்யை யும் குறித்தன. வடபுல அடுக்குக் கட்டு முறையின் படி, ஒன்றின் கீழ் இன்னோர் உயிர் மெய்யைப் பொருத்தி மேலது மெய்யாகவும், கீழது உயிர் மெய்யாகவும் கொள்ளப்பட்டது.

### தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்

எகிப்து, தாய்லாந்து, ஓமன் (கட்டற்ற கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து)

- எகிப்தில் லெக்குஸ்லிமன் என்ற இடத்தில் கி.மு 1 ஆம் நூற் றாண்டு காலத்துக்குரிய உடைந்த சாடி ஒன்று தமிழ்ப்பிராமி எழுத் துக்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் "பானை ஓறி" என்று எழுதப் பட்டிருந்தது. இதே இடத்தில் இதற்கு முன்னரும் தமிழ்ப்பிராமி எழுத் துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கி.மு 1 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரிய உடைந்த சாடியில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் எகிப்தில் பெரினிஸ் ரொக்ளோடிசியா என்ற குடியேற்ற இடத்தில் கண்டுபிடிக்கப் பட்டன.
- கி.மு 2 ஆம் நூற்றாண்டு கால மட்பாண்டத்தில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் தாய்லாந்தில் கண்டு பிடிக்கப்பட்டன. தாய்லாந்தில் குவான் லுக்பட் என்ற இடத்தில் கி.மு 3 ஆம் - 4 ஆம் நூற்றாண்டு உரைகல் ஒன்றில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- ஓமன் நாட்டில் தமிழ் -பிராமி பானை சிதில் கண் டெடுக்கப்பட் டுள்ளது. இதில் ணந்தை கீரன் என்ற சொல் உள்ளது. இது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக் கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தாலி நாட்டை சேர்ந்தவர்கள் ஓமனில் இதனை கண்டுள்ளார்கள்.

தாய்லாந்தில் உள்ள பிராமி எழுத்துக்களையும் எகிப்தில் உள்ள பிராமி எழுத்துக்களையும் தமிழ் பிராமி என இனங்கண்டது "ற" என்ற தமிழ் ஒலிக்கான பிராமி எழுத்தே ஆகும். இந்த முறைமை தனித்தமிழ் எழுத்து முறைமை எனக் கூறப்படுகிறது.

### இலங்கை

- கி.மு 2ஆம் நூற்றாண்டு கால மட்பாண்ட துண்டுகள் பூநக ரியில் கண்டுபிடிக்கப்பட்டன.
- கி.மு 3ஆம் நூற்றாண்டு கால கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட் டன.
- தட்டையான தட்டத்தின் கறுப்பு, சிவப்பு மட்பாண்ட துண்டுகள் தமிழ்ப்பிராமி எழுத்துக்களுடன் இலங்கையின் திசமகாராமையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் காலம் ஏறத்தாழ கி.மு 300 என அகழ்வினை மேற்கொண்ட ஆய் ச்சியாளர் தெரிவித்துள்ளார்.

### இந்தியா

- கி.மு 2ஆம் நூற்றாண்டு பானையில் வாயில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கேரளாவில் கண்டு பிடிக்கப்பட்டன.
- கி.பி 3ஆம் நூற்றாண்டு கால நான்கு தமிழ்ப்பிராமி கல்வெட் டுக்கள் கேரளாவிலுள்ள குகையிலும் மலையிலும் காணப்பட்டன. அதில் ஒன்று "சேரன்" என்ற சொல்லுடன் காணப்பட்டது.

### தமிழ் நாடு

- ஆதிச்ச நல்லூரில் இரும்புக் காலத்தைச் சேர்ந்த தாழி கண்டு பிடிப்பு.
- கி.மு 500 கால தமிழ்ப்பிராம , எழுத்துக்கள் ஈ.ரோட்டுக்கு அருகிலு ள்ள சென்னிமலையிலுள்ள கொடு மணலில் கண்டுபிடிக்கப்பட்டன.
- கி.மு 500 கால தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பழனிக்கு தென் மேற்கில் 12 கி.மீ தூரத்திலுள்ள பொருந்தலில் கண்டுபிடிக்கப்பட்டன.
- தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் மதுரை திருப்பரங்குன்றத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் "மு-ன-க-ர" எனவும் "மு-ஹ-க-டி" எனவும் எழுதப்பட்டிருந்தது. இது முதலாம் நூற்றாண்டுக்கு உரியது.
- ஐந்தாம் "வீரர்" கல்(நடுகல்) தமிழ்ப்பிராமி எழுத்துக்களுடன் போர்ப்பனக் கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்டன.
- விருத்தாசலம் அருகே தர்ம நல்லூரில் தமிழ் பிராமி எழுத்துக் களோடு 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய பானை ஓடு கண்டு பிடிக்கப்பட்டது.

இலங்கையின் திசமகாராமை தமிழ் பிராமிச் சாசனம் என்பது கறுப்பு, சிவப்பு மட்பாண்ட தட்டை யான தட்டங்களில் தமிழ் பிராமியில் பொறிக்கப்பட்ட இலங்கை திச மகா ராமையில் அகழ்வில் கண்டுபிடிக் கப்பட்ட மட்பாண்டத்தைக் குறிக் கின்றது.

இது சுமார் கி.மு 200 ஆண்டு காலத்திற்குரியது என அகழ்வினை மேற்கொண்ட ஜேர் மனிய அறி வியலாளர் குறிப்பிடுகின் றார். இச்சாசனம் பிராமி மற்றும் பெருங் கற் கால கிறுக்கல் குறியீடுகள் கலந்து காணப்படுகின்றது. அது தற்போது காணாமல் போய்விட்டது.

### ஆனைக்கோட்டை முத்திரை (கட்டற்ற கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து)

ஆனைக்கோட்டை முத்திரை என்பது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆனைக்கோட்டை என்னும் இடத்தில், 1980 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற அகழ்வாய்வு ஒன்றின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரை ஆகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு அடக்கக் குழி ஒன்றினுள் கண்டு பிடிக்கப்பட்ட இம்முத்திரை ஒரு மோதிரத்தின் முன்பகுதியாக இருக் கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த முத்திரை எதனால் செய் யப்பட்டது என்பது தொடர்பாக ஆய் வாளர்கள் மத்தியில் முரண்பட்ட கருத்துக்களே இருந்து வருகி ன்றன. பேராசிரியர் கா.இந்திர பாலா இந்த முத்திரையானது உலோக முத்திரை எனத் தமிழக இந்து பத்திரிகையில் 1981 இல் எழுதிய கட்டுரையில் கூறியிருந் தார். ஆனால் அவர் எந்த உலோ கத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பாகக் குறிப்பிடவில்லை.

பொ.இரகுபதி (1987) இந்த முத்திரையானது வெண்கலத் தினால் செய்யப்பட்டது என்றுள் ளார். ஐராவதம் மகாதேவனும் (2003), பேராசிரியர் சி.பத்மநாத னும் (2006), அது உலோகத்தால் ஆனது என்றுள்ள போதும் அது எந்த உலோகத்தினால் அல்லது உலோகக் கலவையால் ஆனது என்பதைக் குறிப்பாகக் கூறவி ல்லை. எதுவிதத்திலும் க.இந்திர பாலா 2006 ஆம் ஆண்டில் எழு தியிருந்த நூலில், அது Steatite (Soapstone) ஆல் ஆனது என்று ள்ளார்.

முத்திரையின் கீழ் வரிசையில் மூன்று பிராமி எழுத்துக்களும் மேல் வரிசையில் மூன்று அடை யாளங்களும் காணப்படுகின்றன. மேல் வரிசையிலுள்ள மூன்று அடையாளங்களுள் ஒன்று ரோம எழுத்தான C போன்ற அடை யாளத்தின் வளைவு உச்சிப் புள் ளியில் ஒரு குற்றும் காணப்படு கிறது. மற்றைய இரண்டு அடையா ளங்களும் ஒரே மாதிரியாகத் தோற்றமளிக்கின்றன.

### தமிழியை தற்கால தலைமுறைக்கு கொண்டு செல்லல்

தமிழர்களின் தொன்மை எழுத் தான பிராமி எழுத்துக்களை தற்கால தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் திருக்குறளை அக்கால எழுத்து முறைக்கு மாற்றி தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச் சித் துறை அச்சிட்டு உள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு பொலிஸா...

மன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

2005ஆம் ஆண்டு பேலியகொட பொலிஸாரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் இவர்கள் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீண்ட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கினார். (ம-7)

## வடக்கில் 164...

பலாலி கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள விவசாய நிலங்களில் 59 ஏக்கர் காணியை விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எதிர்வரும் 10ஆம் திகதி அக் காணிகளை விடுவித்து, உரிமையாளர்களிடம் கையளிக்க முடியும் என தெரிவித்தனர்.

அதேவேளை கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள 105 ஏக்கர் காணிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## நம்பிக்கை...

உறுப்பினருமான சட்டத்தரணி லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியோர் கொண்டு வந்துள்ளனர்.

இதன்படி, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## பொருளாதார...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சட்ட சீர்திருத்தம் தொடர்பாக வட்ஸ்நியூ (whats new) என்ற இளம் சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம். பொது நிதி முகாமைத்துவச் சட்டம், பொதுக்கடன் முகாமைத்துவச் சட்டம், விவசாய நவீன மயமாக்கல் சட்டம் என்பவற்றைப் போன்றே இந்த அனைத்து இலக்குகளை அடையக்கூடிய பொருளாதார மாற்றச் சட்டம் கொண்டு வரப்படும்.

தற்போதுள்ள முதலீட்டுச் சபைக்குப் பதிலாக முதலீட்டு ஆணைக்குழுவொன்று உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தி ஆணைக்குழு நிறுவப்படும். அத்தோடு சுற்றுலா தொடர்பான புதிய சட்டம், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், புதிய சுற்றுச்சூழல் சட்டம், சிங்கராஜா, சிவனொளிபாத மலை, ஹட்டன் சமவெளி, வஸ்கமுவ வனப்பூங்கா என்பவற்றின் பாதுகாப்புக்காக புதிய சட்டங்கள் கொண்டுவருவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்புதிய சட்டங்கள் கொண்டு வருவதை சிலர் தடுக்க முயன்றாலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் அந்தச் சட்டங்களை யாராலும் ரத்து செய்யவோ அல்லது மறை முகமாக செயல்படுத்தாதிருக்கவோ முடியாது" இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## பிரபாகரனின்...

சாந்தனின் புகழுடல் வல்வெட்டித்துறையில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவரது வீடு அமைந்திருந்த வளாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது.(ம-7,60)

## திட்டமிட்டு...

முதல் அவர் உயிரை திட்டமிட்டு பறித்துள்ளார்கள். இதுவே எங்கள் மூவருக்கும் நடக்கப் போகிறது என்பது தெரிகிறது என இன்றும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தனுடன் கைது செய்யப்பட்டு, தண்டனை அனுபவித்து, விடுவிக்கப்பட்ட பின்னரும், இலங்கை திரும்ப முடியாது, சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் ஒலிநாடா ஊடாக உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

33 வருடங்களாக சிறையில் சாந்தனுடன் காலத்தை கழித்தவன். இன்று அவர் உயிருடன் இல்லை. அவருக்கு மக்கள் கூடி அஞ்சலி செலுத்துகின்றனர்.

எங்கள் போராட்டத்தை அழிக்க பல சக்திகள் முயன்றன. அதில் ஒன்று தான் ராஜிவ் காந்தி கொலை. அதில் நாங்கள் பலியாக்கப்பட்டவர்கள். எங்கள் ஊடாக எங்கள் மக்களுக்காக போராடியவர்களை நசுக்கப் பின்னப்பட்ட சதி வலைகள்.

போராட்டத்தை அழிக்க தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களை வழங்க மக்கள் மத்தியில் பயத்தை விதைக்க குறியீடாக பயன்படுத்தப்பட்டவர்களே நாம்.

சாந்தனின் உயிர் திட்டமிட்டு பறிக்கப்பட்டதே. சாந்தனுக்கு அநீதி இழைக்கப்பட்டதை மக்கள் வெளிப்படுத்தும் போதே, திரும்ப திரும்ப செய்ய மாட்டார்கள். நாதியற்றவர்கள் என்றால், திரும்ப திரும்ப நசுக்கவே செய்வார்கள்.

சாந்தன் தாய் மண்ணில் கால் வைக்க முதல் உயிரை பறித்துள்ளார்கள். இதையேதான் எங்கள் மூவருக்கும் (முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார்) செய்ய போகிறார்கள்.

32 வருடங்களாக சிறையில் மனதையும், உடலையும் திடமாக வைத்திருந்த ஒருத்தர், சிறப்பு முகாமில் ஒரு வருடத்திற்கு எவ்வாறு இப்படி மாறி போனார். இதில் எங்களுக்கு நியாயமான சந்தேகம் இருக்கு.

மக்களின் அஞ்சலி ஊடாக வெளி உலகுக்கு எமக்கு இழைக்கப்பட்ட அநீதி தெரியவர வேண்டும் என தெரிவித்தார். (ம-7,33)

## எரி...

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 09 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 447 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 458 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 05 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 257 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை மற்றும் ஓட்டோ டீசலின் விலையில் மாற்றம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### தன நிதானய
திகதி - 2024.03.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1439
F 19 33 66 69 F
Double Chance 03537

### மஹஜன சம்பத
திகதி 2024/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 5409
Q 1 4 1 9 7 7

### மெகா பவர்
திகதி 04/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1757
X 08 46 63 65 72
Double Chance 63769

### லக்கி 7 VIP
திகதி 2024.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 0235
W 0 7 4 6 9 0 W

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3651
சீட்டிழுப்பு திகதி | 04.03.2024
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 08 41 64 79
C 16917

### ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 0718
தனுசு 13 17 41 49 தனுசு
57271 24

### அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2209
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2024.03.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,144,826.40
வெற்றி இலக்கங்கள் 20 27 58 64
ஆங்கில எழுத்து F

### ஜயோதா Jayoda
திகதி 2024.03.04 வெற்றி வாரம் 2005 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 13 19 59 60 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,289,402.00

### ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 02 34 35 39 42
1559 பச்சை 04.03.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 509,782,078.20

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4095 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.04 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 16 29 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 9,347,280.00


### சனிதா Shanida
திகதி 2024.03.04 வெற்றி வாரம் 4544 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 12 30 33 69 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,841,658.80

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2383 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 04.03.2024 தினம் திங்கள்
வெற்றி இலக்கங்கள் 04 21 52 72 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,211,077.60

### உத்தியோகபூர்வ முடிவுகள்
04.03.2024 வெற்றி வாரம் 117 ஊதா
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 4 3 0 0 3 8
B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,404,416.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில்
12 - 02 - 1938

விண்ணில்
02 - 03 - 2024

## பொன்னுச்சாமி பாலச்சந்திரன் (பாலா)

( இளைப்பாறிய சாலைப் பரிசோதகர், இ.போ.ச கோண்டாவில் சாலை, இளைப்பாறிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - விக்னேஸ்வரா வித்தியாலயம், முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம், குருசுவாமி வித்தியாலயம் - கைதடி )

ஓடை ஒழுங்கை வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கைதடி, கொழும்பு மற்றும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி பாலச்சந்திரன் அவர்கள் கடந்த 02.03.2024 (சனிக்கிழமை) அன்று இயற்கை எய்திஉள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் - சிவபாய்க்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமகள், முகுந்தன் (பெல்ஜியம்), சயந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (புகையிரத நிலைய அதிபர்), இராஜேந்திரம் (ஆசிரியர்), மகேஸ்வரி (லண்டன்), அமிர்தாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரனும் சதானந்தன் (TCT ஊழியர்), சுபாஜினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் உமேசன், நர்த்தனன் (அவுஸ்திரேலியா), தரணியன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, நாகம்மா, இலங்கைநாயகம் (ஆசிரியர்), முத்துக்குமாரு (தபாலதிபர்), கணேஸ்வரன் (ஜேர்மன்) மற்றும் அருந்ததி, பராசக்தி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (06.03.2024) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9.30 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

11, ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (19354)

தகவல்:
குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19361)

076 825 7716 (ஆகாஸ்)

**VACANCIES**

Show room Sales Executive, GRN/ Data Entry, Office Admin Regional Sales Manager, Instructor English, Draughtsman, Accountant, Restaurant Manager, Office Clerk, Branch Manager, Dental Assistant, Lab Assistant (19348)

074 083 3368, 077 773 3368

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

**Canada and Italy Visa**

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும். (19353)

VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584

**விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (19340)
074 17 37 684

**மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்**

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/= (19118)

தொடர்புகளுக்கு
077 544 8503

**சாரதி தேவை**

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.




சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777 (C-8468)


# மரண அறிவித்தல்



## இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்)

**பிறப்பு : 17.08.1946** **இறப்பு : 03.03.2024**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சவுதிஅரேபியா, இலண்டனில் வசித்தவரும் தற்போது கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்) அவர்கள் நேற்று முன்தினம் (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் தம்பித்துரை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (லண்டன்), செந்தில்குமார் (P.S.குமரன் - புவியியல் ஆசிரியர்), சஞ்ஜீவன் (போத்துக்கல்), தனூசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபோதினி (லண்டன்), அங்கயற்கண்ணி ( ஆசிரியை-யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), பிரவீணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ் சென்றவர்களான இராசரத்தினம், அன்னலட்சுமி, ஞானம்மா மற்றும் தவராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தனபாலசிங்கம், பரமேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரதிஸ்கா, தக்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.03.2024) புதன்கிழமை பகல் 10.00 மணியளவில் கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செந்தில்குமார் (மகன்) : 077 611 6453

வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,
கொக்குவில் தாவடி. (C-8467)

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org